

# 25 மார்ச் 83 சுட்டி

மாத இதழ் 50 காசு




FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010



FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010



☐ இன்றைய உலக கண்ணோட்டத்தில் இந்தியாவின் பாதுகாப்பு பற்றி தங்கள் கருத்து என்ன?

—சுட்டி தாசன், திருச்சி

நெஞ்சை நிமிர்த்துமளவுக்கு பலமாக இல்லை; நடுங்க வேண்டிய அளவுக்கு பலவீனமாகவும் இல்லை.

☐ நாம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம்?

—எஸ். கல்யாண சுந்தரம், சேலம்

விடிவை நோக்கி, நம்பிக்கையுடன்!

☐ இருளை மட்டுமல்ல வெளிச்சத்தைக் கூட இருளாகப் பார்ப்பது தான் சுட்டியின் நோக்கம் எனக் கூறுபவர்களைப் பற்றி...

—மோ. விஜயகுமார், திருப்பூர்

கவலைப் படுவதில்லை. சரியென்றும் சத்தியமென்றும் நினைப்பதை, சுட்டி துணிவாக எழுதுவது சில பிற்போக்கு வாதிகளுக்கு எரிச்சலூட்டுவதன் எதிரொலி இது போன்ற விமர்சனங்கள்; விடுங்கள்.

# சுட்டியார் பதில்

☐ புதுக் கவிதையின் வளர்ச்சி மரபுக்கவிதை வளர்ச்சியைப் பாதிக்குமா?

—பி. சின்னக்கண்ணன், கோட்டூர்

(தமிழ் வித்துவான்கள் ஒப்புக்கொள்ளா விட்டாலும்) ஓரளவு பாதித்தே இருக்கிறது என்பதே உண்மை.

☐ சுட்டியாரே! இந்தியாவில் அனைத்து அரசியல் கட்சிகளுமே பிளவுபடக் காரணம் என்ன?

—சமரன், வெளிப்பாளையம்

ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஏற்படும் பெரிய வளர்ச்சி பிளவை ஏற்படுத்துவது என்பது பொது நியதி தானே.

# உணவு நெருக்கடி ஏன்?

உணவு அமைச்சர் நெடுஞ்செழியனும், தலைமைச் செயலர் திரவியமும் கடந்த அக்டோபரில் தான் அரிசி நெருக்கடி பற்றி பேசவே ஆரம்பித்தார்கள். அப்படி அவர்களைப் பேச வைத்தது சத்துணவு திட்டம் பற்றிய கவலைதான்.

ஜூலை-1 சத்துணவு திட்டம் அமுலானது. சரியாக 3 மாதங்களில் அரிசி கையிருப்பு பற்றி கவலையும் வந்தது. சத்துணவு திட்டத்திற்கு முன் மாதங்களில் உணவு நிலை திருப்திகரம்-உணவு பஞ்சம் வராது-அரிசி நெருக்கடி இல்லை-என்று உணவு அமைச்சர் தன்னிறைவில் மார்தட்டிய அறிவிப்புகள் பத்திரிகைகளில் அடிக்கடி காணப்பட்டன.

தமிழகம் மட்டுமின்றி, இவ்வாண்டு அனைத்து பாகங்களுமே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அரிசி கொள்முதல் போன ஆண்டை விட (வறட்சி நேரமாகிய) இந்த ஆண்டு அதிகமாக கொள்முதல் செய்த இரண்டே இரண்டு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

கடந்த ஆண்டு இந்நேரத்தில் தமிழக அரசு கொள்முதல் அரிசி 2,30,000 டன். இவ்வாண்டு இது 2,46,000 டன்னாக உயர்ந்தே உள்ளது..

இருப்பினும் நெருக்கடி ஏன்?



FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

நியாயவிலைக் கடைகள் மூலம் அரசு விநியோகித்த அரிசியின் அளவு வானத்தை முட்டுவதாக திடீரென உயர்ந்திருப்பது தான் நெருக்கடிக்குக் காரணம்.

1982, பிப்ரவரியில் நியாய விலைக் கடைகளில் விநியோகித்தது 44,000 டன்; மே 37,000 டன்; செப்டம்பர் 94,000 டன்; நவம்பர் 96,000; டிசம்பர் 92,000 டன்.

இந்தப் புள்ளி விவரம் அரசின் நிர்வாகத் திறமையின்மையைத் தெளிவுபடுத்துகிறது. வறட்சி நேரத்தில் வேறு எந்த மாநிலமும் கையிருப்பிலிருந்து விநியோகத்தை 2 மடங்காக உயர்த்தி வழங்கியதில்லை.

இப்போது மத்திய அரசை வம்புக்கிழுப்பதோ, வறட்சியை மட்டும் காரணம் காட்டுவதோ, உண்மையை மறைக்கும் வேலைகளே தவிர வேறல்ல.

சரியாக திட்டமிடாத சத்துணவு என்கிற விளம்பரத்திட்டமும், நிர்வாகத் திறமையின்மையும், அரசின் கையாலாகத்தனமும் சேர்ந்தே தமிழகத்தில் உணவு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கின்றன.

முதலமைச்சரின் உண்ணாவிரத ஸ்டன்ட், அவருக்கு ஏற்பட்ட அவப்பெயரை அவ்வளவு சீக்கிரம் மூடி மறைக்காது.

புள்ளி விவரங்கள் ஆதாரம் இந்தியன் எக்ஸ்பிரஸ், எதிரொலி.

ஏஷியாட்டுக்காக டெல்லியில் விளையாட்டு அரங்குகளும் ஓட்டல்களும் பயிரிடப்பட்டன. இதைச் செய்தது அரசாங்கம், இப்போது திரும்பிய திசையெல்லாம் ஆஸ்பத்திரிகள் முளைத்து வருகின்றன. இப்படி மும்முரமாக ஆஸ்பத்திரி கட்டும் பணியில் இறங்கியிருப்பது வேறு யாருமல்ல! தனியார் துறையிலுள்ள தயாரிப்பு நிறுவனங்கள்தாம்!

மனசாட்சியின் அரிப்பை தாங்க முடியாமல் பொதுநலம் கருதி தனியார் நிறுவனங்கள் இத்தகைய அறப்பணியில் இறங்கியிருப்பதாக தோன்றுகிறதா? அதுதான் இல்லை! மருத்துவமனைகளுக்கு நன்கொடை கொடுக்கும் நிறுவனங்களுக்கு வருமான வரியிலிழிந்து 50% கழிவு உண்டு; தொழிற்சாலைக்கருகில் மருத்துவமனைகள் கட்ட ஆகும் செலவு வியாபார செலவினமாக கருதப்பட்டு வரிவிலக்கு பெறுகிறது. திடீர் மருத்துவ மனைகளின் தோற்றத்திற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா?

## "பால் போன்ற நீர் பாழாகலாமா?



தண்ணீர்ப் பஞ்ச நேரத்தில் பொதுக் குழாயை பயன்படுத்தி விட்டு மூடாமல் யாரோ ஒரு பொறுப்பற்ற பொது ஜனம் போயிருக்கிறது!

பாழாய் போகும் நீரை, பாலாகக் கருதி நிறுத்த பால் மணம் மாறாப் பாலகன் பொறுப்புடன் முயல்கிறான். கண்டும் கவலையின்றி செல்லும் பெரியவர்களுக்கு இல்லாத கவலை இச்சிறுவனுக்கு!

குழாயின் திருகைத் திருகித்திருகி பாவம் அந்தப் பிஞ்சுக்கைகள் நொந்து போனது தான் மிச்சம்.

நாளைய தலை முறை சரியாக சிந்திக்கும்—பொறுப்பாக நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கை துளிர்க்கிறது.


FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010



**சட்ட சபை**

அற்ற குளத்து
அறு நீர்ப்பறவைகளின்
வேடந்தாங்கல்

—கவிஞர் ரமணகுமார்




**பாரதத் தொழு**

ஆட்டை வளர்க்கிறீர்
இறைச்சிக்கு
மாட்டை வளர்க்கிறீர்
பாலுக்கு
பெட்டியிலே
வோட்டைப் போட
எங்களை வளர்க்கிறீர்
ஆட்டுக்கும் மாட்டுக்கும்
தீனியாவது போடும் நீர்
நாங்கள் படுகின்ற
பாட்டுக்கு வெறும் கனவைத்
தின்ன விதிக்கின்றீரே.

—ப்ரம்மகாவ்யன்

**ஒருமைப்பாடு**

தேசிய
ஒருமைப்பாடு!
பெருமையாய்
காப்பது
அரசுமல்ல
அரசியல் வாதிகளல்ல
ஒரே மேடையில்
அனைத்து மாநில
இலாட்டரி சீட்டு
விற்கும்
விற்பனையாளந்தான்.

—ந. க. துறைவன்

## மனிதனா மிருகமா

காட்டு வழியே சென்று கொண்டிருந்த ஒருவனைத் தன் பசிக்கு இரையாக்க புலி ஒன்று துரத்த ஆரம்பித்தது. வேகமாக ஓடிச் சென்று ஒரு மரத்தின் மீது ஏறினான் அவன். ஆனால் மரத்தின் மேல் கிளையில் கரடி ஒன்று உட்கார்ந்திருந்தது. பயத்தால் நடுங்கிய மனிதனைப் பார்த்துக் கரடி சொன்னது: 'பயப்படாதே! நீ மரத்தில் ஏறும் போது தெரிந்தோ தெரியாமலோ என் கால்களைத் தொட்டாய். நீ என்னிடம் சரணாகதியாக வந்துள்ளதை நான் அறிவேன். உன் உயிருக்கு ஆபத்து இல்லை. இந்தக் கிளை மேலேயே இளைப்பாறிக் கொள்' என்றது. மனிதன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். கீழே நின்ற புலி கரடியுடன் பேரம் பேசியது. 'நீயும் நானும் மிருகம். அவன் மனிதன். நம் பகைவன்! ஒன்று அவனை நீ சாப்பிடு. உன் பசியாவது தீரட்டும். இல்லையெனில் அவனைக் கீழே தள்ளி விடு என் பசியையாவது தீர்த்துக் கொள்கிறேன்' என்றது.

கரடி உறுதியாகப் பதில் தந்தது: 'அடைக்கலம் பெற்றவனைக் காப்பாற்றியே தீருவேன்!' புலி மனம் தளரவில்லை. சிறிது நேரம் சென்ற பின் கரடி மரக்கிளையில் தொங்கியவாறே தூங்க ஆரம்பித்தது. இப்போது புலி மனிதனுடன் பேரம் பேசியது: 'எனக்கு கோரப்பசி. நீ எத்தனை நாளைக்குத் தான் இந்தக் கிளையிலேயே இருக்கப் போகிறாய். நீ கீழே வந்தால் நான் நிச்சயம் உன்னைக் கொல்லத்தான் போகிறேன். ஆனால் நீ உயிர் பிழைக்க ஒரு வழி இருக்கிறது. கரடி இப்போது தூங்கிக் கொண்டு தான் இருக்கிறது. கரடியைக் கீழேத் தள்ளி விடு. என் பசியும் தீரும், நீயும் உயிர் பிழைக்கலாம்' என்றது.

மனிதன் சிறிதும் யோசிக்கவில்லை. கரடியைக் கீழே தள்ளினான். ஆனால் கரடி அடுத்த கிளையைக் கெட்டியாகப்



FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

## புது திருமண மந்திரம்

நடைமுறை வாழ்க்கையோடும், அறிவுக்குப் பொருத்தமாகவும் நமது சம்பிரதாயங்களை மாற்றி அமைக்க வேண்டிய காலம் வந்து விட்டது. இது மிகையாகவலிந்து சொல்வதல்ல. நடப்பதை தான் சொல்கிறோம்.

புகை நடுவே, மணமக்களுக்குப் புரியாத "பாஷை"யில், ஏன் எதற்கு என்று தெரியாமல், குருக்கள் மந்திரம் ஓதியே வழக்கமான திருமணம் நடக்கிறது. இதையே வேறு மாதிரி, பயனுள்ளதாக மாற்றி மராட்டியத்தில் நடத்தியிருக்கிறார்கள்.

பம்பாய்க்கு 100 கி. மீ அருகே 'தானே' மாவட்டத்தில் உள்ள சிறு கிராமம். இங்கு சென்ற ஜனவரி மாதம் 4 ஆம் தேதி ஏராளமான ஆதிவாசி மணமக்களுக்குக் கூட்டுத் திருமணம் நடந்திருக்கிறது. வழக்கமான திருமணம் தான். மணமக்கள் மாலை மாற்றிக் கொண்ட போது மந்திரங்கள் ஒலித்தன. ஆனால் புரியாத வட மொழி மந்திரங்களல்ல, புரியக் கூடிய அவர்கள் தாய் மொழியான மராட்டி மொழியில் ஒலித்த "ஸ்லோகங்கள்" என்ன தெரியுமா?

"கடன் சுமையில் மாட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் கையிருப்புக்களையோ, சொத்தையோ அடகு வைக்காதீர்கள். உங்களை விலங்கிடுமென்றால், சம்பிரதாயங்களை உடைத்தெறியுங்கள். என்றும் கொத்தடிமைகளாக இருக்கவே கூடாது என்பதை நீங்கள் மறவாதீர்கள்!"

இன்றைய இவர்கள் வாழ்க்கை முறைக்கு தேவையான மந்திரங்கள் இவை தானே? — கிசு

பிடித்துக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. பாவம் மனிதன். குலை நடுங்கிப் போனான். நன்றி கொன்ற நிலையில் அவன் பாதிசெத்துக் கொண்டிருந்தான். கரடி நிதானமாகப் பேசியது:—

'பயப்படாதே! இப்போது கூட உன் சுய நலத்தையும், அறியாமையையும் எண்ணி நான் பரிதாபப்படுகிறேனே தவிர பழிவாங்க நினைக்கவில்லை. நீ இப்படிச் செய்து விடலாம் என்று நான் முன் ஜாக்கிரதையாகவே தான் இருந்தேன். இப்போதும் உன்னை நான் புலியிடம் தள்ள மாட்டேன் கவலைப் படாதே' என்றது! — யாரோ

---

அரசியலில் நுழையுமுன் ஒவ்வொருவனும் மனநல மருத்துவரிடம் சான்றிதழ் பெற வேண்டும் என்கிறார் பம்பாய் மேயர் திரு. P. S. பாய். ஜனவரி மாதம் 7-ம் தேதியன்று இந்திய மனநல மருத்துவக் கழகத்தின் 35வது கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகையில் 'தற்போது அரசியல் வாதிகள் மனதிலே தோன்றுவதையெல்லாம் பேசுகிறார்கள். கொஞ்சம்கூட தகுதியே இல்லாதவர்களெல்லாம் மந்திரிகளாக இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்தால் இப்படியொரு சான்றிதழ் அத்தியாவசியம் என்றே தோன்றுகிறது' என்று கூறியிருக்கிறார்.

■ ஜனாதிபதி ஜெயில் சிங்கிற்கும் ஜாஸ்பாய் பட்டேல் (62) என்பவருக்கும் ஓர் ஒற்றுமை. ஜெயில் சிங்கிற்கு சில மாதங்களுக்கு முன் அமெரிக்க டெக்சாஸ் நகரில் நடைபெற்ற டிரிபில் கரோனரி பைபாஸ் என்ற அதே அறுவை சிகிச்சை தான் நவ-11 அன்று ஜாஸ்பாய்க்கும் பிரபல பம்பாய் மருத்துவமனையில் நடந்தது. ஜனாதிபதி பயணம் செய்த அதே தூரம் தான் இவரும் பயணம் செய்திருக்கிறார். ஆம்! டில்லியிலிருந்து ஜனாதிபதி அமெரிக்கா சென்றார். ஜாஸ்பாய் கலிபோர்னியாவிலிருந்து இந்தியா வந்து வெற்றிகரமாக இந்த ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறார். — சண்டே

■ கோடீஸ்வரர் லால்சந்த் ஹீராசந்த் நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி இதயதுல்லா முதலாளித்துவ முறையை மட்டம் தட்டி பேசும் மனப்போக்கை கண்டித்தார். பொருளாதார வளர்ச்சிக்கு முதலாளிகள் இந்தியாவுக்கு தேவை என்றார். முதலாளித்துவ முறையின் மோசமான அம்சங்கள் மட்டும் சமூகத்துக்கு சொல்லப்பட்டு வருவதாக வருத்தப் பட்டார். ஏழ்மையை விரட்ட முதலாளித்துவ முறை உண்மையிலே நாட்டுத் தேவை என வலியுறுத்தினார். நிதி கமிஷன் தலைவர் ஒய். சவானும் நாட்டுக்கு முதலாளிகள் சேவை இன்னமும் முக்கியமாகவே இருந்து வருகிறது என்றார். அரசியல் வாதிகள் சோஷலிசம் பேசுவதெல்லாம் தேர்தல் நேரத்தில் மட்டும் தானா? — தினமணி

---


"சட்டி" பத்திரிகை அறிக்கை—4 வது பாரம் (8 வது பிரிவுப்படி)

1. வெளியிடும் இடம் : 1494, அண்ணாசாலை, சென்னை.600 040.
2. வெளியிடும் காலம் : [illegible]
3. அச்சிடுபவர் : [illegible]
தேசிய இனம் : இந்தியர்
முகவரி : 88, [illegible] தெரு, சென்னை.600 002.
4. வெளியிடுபவர் : பெ. [illegible]
தேசிய இனம் : இந்தியர்
முகவரி : 10, [illegible] ரோடு, சென்னை.600 010.
5. ஆசிரியர் : [illegible]
தேசிய இனம் : இந்தியர்
முகவரி : 1494, அண்ணாசாலை, சென்னை.600 040.
6. பத்திரிகையின் மொத்த முதலீட்டில் 1 க்கு மேல் பங்குடையோர், உரிமையுடையோர், பெயரும் முகவரியும். : [illegible] சென்னை.600 040. [illegible] 1494 அண்ணாசாலை, சென்னை.600 040.

பெ. [illegible] [illegible]

நாள் : 28.2.83

(ஒப்பம்) பெ. [illegible]
வெளியிடுவோர்

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

## முற்போக்கு இதழ்கள்: 1

# தேன்மழை

மாணவர்களால், மாணவர்களுக்காக நடத்தப்படும் மாத இதழ் தேன் மழை. சமுதாய பிரச்சனைகளைப் பற்றி எந்த உணர்வும் இல்லாத கல்லூரி மாணவர்களின் பெரும் பகுதி ஒரு பக்கம் வேதனையளிக்கும் சூழலில், மாணவர்களுக்காகவும் மக்களுக்காகவும் தேன்மழை வருவது ஆறுதலளிக்கிறது.

வணிக நோக்கங் கொண்ட பத்திரிகைகள் கூட புற்றீசல் போல தோன்றி மறையும் நிலையில், ஒரு முற்போக்கு இதழ் தொடர்ந்து 12 ஆண்டுகள் மாணவர்களின் பொறுப்பில் நடந்து வருவது ஆச்சரியமானது. 1970 டிசம்பரில் துவங்கிய தேன்மழை இப்போது 13-வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

AICUF எனப்படும் அகில இந்திய கத்தோலிக்க பல்கலைக் கழக கூட்டமைப்பின் கீழ் இப்பத்திரிகை இயங்கி வருகிறது. கத்தோலிக்க மத அமைப்புகளின் ஒரு பகுதி முதலாளித்துவ ஆதரவு வேலைகளில் தங்களை உட்படுத்திக் கொண்ட காலம் மாறி, இன்று சமூகப் பார்வையுள்ள மாணவர்களை உருவாக்கி வருகின்றன. லத்தீன் அமெரிக்காவிலும், பிலிப்பைன்சிலும் கத்தோலிக்க திருச்சபை ஆதிக்க அதிகார வர்க்கங்களை எதிர்த்துப் போராடி வரும் மக்களுடன் தோள் கொடுத்து வருவதன் எதிரொலி இங்கும் பரவுவது, வரவேற்பிற்குரியதாகும்.

தேன்மழை கடந்த 12 ஆண்டுகளாக, கிட்டத்தட்ட எல்லா முக்கிய மக்கள் பிரச்சனைகளையும் துணிவுடன் எழுதி வந்திருக்கிறது. வறுமைக் கோட்டு வாரிசுகளின் உள்ளக் குமுறலை, உரத்த குரலில் அம்பலப் படுத்தியிருக்கிறது. அவசர நிலை பிரகடனத்தின் போது, மிசா அடக்கு முறையை அஞ்சாமல் கண்டித்து எழுதியது. இந்த எழுத்தின் வெப்பம் போலீசாரை தேன்மழை அலுவலகத்தை சூறையாட வைத்தது. அது வரை வெளி வந்த ஓரிதழ் கூட விடாமல் பறி முதல் செய்து கொண்டு போயினர். அதன் பிறகு ஏற்பட்ட பதட்ட நிலையில் சிறிது காலம் தேன்மழை வருவது நின்றாலும், சில மாதங்களில் மீண்டும் அது புத்தெழுச்சியுடன் புறப்பட்டது.

இதன் ஆசிரியர் குழு உறுப்பினர்களான மாணவர்களுக்கு சரியான பார்வையும், பத்திரிகையியல் அறிவும் பெற, பயிற்சி அளிக்கப்படுகிறது. குழுவின் விவாதத்திற்குப் பின்னரே கட்டுரைகள் அமைக்கப்படுகின்றன அல்லது தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

கல்லூரி மாணவர்களுக்கு, சமூக விழிப்பூட்டும் தலைப்புகளைக் கொடுத்து இதுவரை தேன்மழை போட்டிகள், பட்டி மன்றங்கள் நிறையவே நடத்தியுள்ளது. மாமூல் தலைப்புகளிலிருந்து மாணவர்களை பயனுள்ள சிந்தனைக்கு இப்போட்டிகள் திருப்பியுள்ளன.

புதிய படைப்பாளர்களை ஊக்குவிப்பதும் உலகுக்குக் காட்டுவதும் தேன்மழையின் பக்கங்களில் பிரதிபலிக்கின்றன. இன்று பிரபலமாயிருக்கும் சில வைரமுத்துக்களை அன்றே இனங்கண்டு தேன்மழை எழுத வைத்திருக்கிறது. 70 வதுகளின் தொடக்கத்தில், புதுக்கவிதையின் வேகத்தைச் சரியாக வளர்த்த சில இதழ்களில் தேன்மழையும் ஒன்று. இன்று மிகச் சிறந்த புதுக்கவிதைகளில் ஒன்றாக காட்டப்பட்டு வரும் "இருட்டிலே வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை" என்பதெல்லாம் தேன்மழையில் வெளியானது தானே.

கல்வித்துறையில் நடக்கும் விவகாரங்களை தேன்மழை தெளிவுபடுத்தாமல் விட்டதில்லை. எஸ்.ஐ.இ.டி கல்லூரி போராட்டம், சேலம் சாரதா கல்லூரிப் போராட்டம் இவற்றைத் தேன்மழை நேரில் சென்று புலனாய்ந்து சரியாக உண்மைகளை முன் வைத்து இப்போராட்டங்களுக்கு ஆதரவும் அளித்தது.

சமீப இதழ்களில், வாசகர்களை விழிப்பூட்டிய சில கட்டுரைகள்: சென்சார் போர்டின் முள்வேலியில் சிக்கிய நெருப்புக்கக்கும் நிஜக்கதையைக் கருவாகக் கொண்ட "பிரஜா சக்தி" என்ற தெலுங்கு திரைப்படத்தைப் பற்றி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

அகாலிகள் பிரச்சனையைப் பற்றி தேன்மழை எழுதிய விரிவான, தெளிவான கட்டுரை போல, எந்த வியாபாரத் தமிழ் ஏடுகளும் மக்களுக்கு வெளியிட வில்லை.

வேறு மொழியில் வெளியான நல்ல கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்த்து தமிழ் வாசகர்களுக்கு, புரியும் படி

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

வழங்குவ்து நல்ல சேவை. ''சுரண்டல்—ஒரு வரலாற்றுப் பூர்வமான ஆய்வு'' என்ற கட்டுரை இதன் நல்ல மொழி பெயர்ப்புப் பணி.

தமிழீழக் கோரிக்கையின் அரசியல் பின்னணியை இலங்கை அன்பர்களுடன் விவாதித்து, வெளியிட்ட கட்டுரை, இதுவரை இது பற்றி புரியாதிருந்தோரை புரிய வைக்கும்-தெளிவூட்டும்.

அதே மாதிரி மீரட்கலவரம், பம்பாய் மில் தொழிலாளர்களின் வரலாறு காணாத போராட்டம் போன்ற கட்டுரைகள் தமிழக வாசகர்களை ஆரோக்கியமாக சிந்திக்க வைப்பனவையாகும்.

எழுதுவதோடு நிற்காமல், தேன்மழை ஆண்டுக்கு ஒரு முறை பத்திரிகை கருத்தரங்கு—பயிற்சி முகாம் ஒன்று 10 நாட்களுக்கு நடத்தி வருகிறது. இந்திய சூழலில் சரியான பத்திரிகை நடத்தும் அவசியமும் முறையும் இங்கு உணர்த்தப்படுகின்றன. இதுவரை நிறைய முற்போக்கு சிற்றிதழ்களும், எழுத்தாளர்களும் தோன்றியிருப்பதாகக் கூறப்பட்டாலும், நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது.

ஏன் தேன்மழை மாதிரியோ அல்லது தேன்மழையை விடவோ அதிகம் மக்களைப் போய்ச் சேரும் பெயர் சொல்லக் கூடிய பத்திரிகை ஒன்றுகூட வரவில்லை? தோன்றியவையெல்லாம் அற்ப ஆயுளுடன் மறைவதன் காரணம் என்ன? தேன்மழை கூட நல்ல பின்னணி இருந்தும் கடந்த 12 ஆண்டுகளில் வெறும் 5000 பிரதிகளே அச்சிடும் நிலையிலேயே தேங்கியிருப்பதன் காரணம் என்ன? மக்களின் பிரச்சனைகள் பற்றிய எழுத்துக்கள் இலட்சக்கணக்கான மக்களிடம் போய் சேரும் வழிகளை வரப்போகும் தேன்மழை கருத்தரங்குகள், தீவிரமாக யோசிக்க வேண்டும்.

தேன்மழை மாதந்தோறும் உரிய தேதியில் வர முயற்சி செய்யாததும் வருத்தமூட்டுகிறது. முற்போக்கு இதழ், வெளிவரும் தேதியில் பிற்போக்காக இருக்கலாமா? தேன்மழை உரிய நேரத்தில் இன்னும் நன்றாக பரவலாக பொழிய வேண்டும்.

ஆண்டு சந்தா: ரூ. 8-00; தனியிதழ்: 75 காசு
தேன்மழை, 125, ஸ்டர்லிங் சாலை,
சென்னை-600 034.

—எழில்

[அடுத்து: குமுறும் நெஞ்சம்]

# புது உலக மொழி

ஒரு புதிய மொழியை உருவாக்குவது பற்றி
சிந்தித்தால் என்ன? எந்த ஓர் இனத்திற்கும், நாட்டிற்கும், கலாச்
சாரத்திற்கும் தனியாக சொந்தங்கொண்டாடாத ஒரு மொழியை
உலக மொழியியல் அறிஞர்கள் உருவாக்க முயலலாமே! உலக
நாடுகள் சபை இதற்கான ஓர் ஆய்வை பெரிய அளவில்
தொடங்கி வைக்க வேண்டும். உடனே முடியா விட்டாலும், சில
ஆண்டுகளில் இது சாத்தியமாகலாம்.

நவீன மொழியியல் துறையின் அத்தனை விஞ்ஞான
வளர்ச்சியையும் உட்கொண்டு அந்த மொழி அமைய வேண்டும்.
மிகக் குறைவான எழுத்துக்கள் அதே நேரத்தில் எளிய வரி
வடிவங்கள் எல்லா நாட்டு மக்களின் நாவினாலும் சிரமமின்றி
உச்சரிக்கக் கூடிய சொற்கள் எல்லா நாட்டு கலாச்சாரங்
களையும் அரவணைத்து தொடுக்கப்பட்ட அமைப்பு.

இது போன்றதோர் முயற்சியைச் சென்ற நூற்றாண்டில்
''லைபினிட்ஸ்'' என்ற கணித விஞ்ஞானி செய்து பார்த்தார்.
40 ஆண்டுகளுக்கு முன் வியன்னா பல்கலைக் கழக தத்துவத்
துறைப் பிரிவினர் முயன்றார்கள் (எஸ்பிரான்டோ). இவை
எதனால் நடைமுறைக்கு வரவில்லை என்பதும் ஆராயப்பட
வேண்டும்.

இப்போது மொழியியலும் அது தொடர்பான விஞ்ஞான
மும் நிறைய வளர்ந்திருக்கின்றன. 1,2, என்ற எண்களை
எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டு விட்டன. கம்ப்யூட்டர்
குறியீடுகளைக் (1,0) கொண்ட கம்ப்யூட்டர் மொழியும் எல்-
லோராலும் ஒரே மாதிரி பயன்படுத்தப் படுகின்றன. அது
போல ஒரு மொழி வரலும் சாத்தியமே!

திட்டமிட்டு செய்யப்பட்ட மொழி, நடைமுறையில் உள்ள
எந்த மொழியையும் விட எளிதாக இருக்கும் என்பது மட்டு
மின்றி, இது தனிப்பட்ட எந்த நாட்டுக்கும் சொந்தமானதல்ல
என்பதால், எல்லா நாட்டு மக்களும் தயக்கமின்றி ஏற்றுக்
கொள்வார்கள். உலக அமைதிக்கும், மனித குல ஒருமைப்
பாட்டிற்கும் இது பெரிய உந்துதலாக இருக்கும்.

உலகம் என்றாவது ஒரு நாள் ஒரே நாடாவதற்கு இந்த
உலக மொழி முதல் படியாக இருக்கட்டும்! —உலகப்பன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

நாடகக் கதை

# ஒரு வங்கியில்

'சார்! வணக்கங்க... உங்க ரெஜிஸ்தர் தபால் இன்னிக்கு வந்திச்சு... அதான் உங்களை பாக்கணுமின்னு ..'

'வணக்கம்... வணக்கம்... என்ன... பணங்கட்டத்தானே வந்தீங்க...?'

'எங்க சார் மொத்தமா கட்டி அடைக்கிறது... கொஞ்சம் தவணை கேட்டுக்கிட்டு போகலாம்னு... மாடு ஒன்னு பூட்டுதுங்க... மழை வேறே மோசம் பண்ணிட்டுதுங்களே...'

'இதோ பாருங்க வீரமுத்து... தடவைக்குத்தடவை நீங்க இப்படியே சொல்றீங்க... பணங்கட்டலேன்னா எதாச்சும் சொல்லிட்டு போறதுக்கா வந்தீங்க'.

'வஞ்சனையில்லேங்க... கட்டக்கூடாதுன்னா நான் ஏன் சார் இவ்வளவு தூரம் வர்றேன்? கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்கசார்... இந்த தபா மட்டும்...'.

'ஏதாச்சும் தெரியுதா உங்களுக்கு... உங்களுக்கெல்லாம் கொடுத்துப்புட்டு பெரிய லப்சர்லே போச்சு புழைப்பு, வேறே பெரிய ஆளுங்க யாருக்காவது மொத்தமா கொடுத்திருந்தா வம்பேயிருக்காது; வேலையும் மிச்சம்; நிம்மதியா இருந்திருக்கும் என்பாடு'.

'எங்க நல்லதைவிட உங்க நல்லதைதானே நீங்க பாக்குறீங்க... ஆனா... உண்மையிலேயே கஷ்டமான நிலையிலே தான் ஒவ்வொரு தபாவும் வந்து உங்களைத் தவணை கேட்கிறேன்...'

என்னாட்டம் விவசாயம் பன்றவன் பயிர்ச்செலவு, குடும்பச்செலவு, மாடு கன்னு பார்த்துக்கிட்டு, இன்னிக்கு இருக்கிற இருப்பிலே-இன்னும் எவ்வளவுதான் கடனுக்குன்னு அடைக்க முடியும்னு சொல்றீங்க? மாச சம்பளக்காரங்க கூட முடியாதே'.

'மிஸ்டர்... இதையெல்லாம் நீங்க கடன் வாங்கறதுக்கு முன்னாலேயில்லே யோஜனை பண்ணியிருக்கனும்'.

'அதுக்கு எங்கே சார் நேரங் கொடுத்தீங்க? ஊர்த் தலைவரோட வந்தீங்க... ஏதோ மந்திரி வர்றாரு விழா வச்சு பேங்க்லேர்ந்து உங்களுக்கெல்லாம் லோன் தர்றோம் வாங்கன்னீங்க... நாங்களும், தலைவருங்கள்ளாம் எலெக்ஷன் டயத்துலே சொன்னாப்போல, கவருமெண்டா பார்த்து நம்ம கஷ்டத்தை தீக்கரதுக்கு ஞாபகமா வந்திருச்சுன்னு மனசு பூரிச்சு போயி உங்களையெல்லாம் தெய்வமா எண்ணி... வந்து மாட்டிக்கிட்டோம்... இப்போ வட்டிக் கடைக்காரன் தேவலாம்... கிட்டி போடறீங்க...'

'உயிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இதுவரைக்கும் பாதி பணம் கட்டியிருக்கேனே... அதையெல்லாம் உங்க மேலிடத்திலே சொன்னா கேட்க மாட்டாங்களா... ஜப்தியை மட்டும் தான் கேப்பாங்களா?'

'யோவ்... நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொன்னா போதும்'.

'எப்படியும் பணங்கட்டிடுவேன்... ஏமாத்த நினைக்கறவன் இல்லே சார்... மானம்னு ஒன்னு எங்களுக்கும் இருக்குது, கொஞ்சம் அவகாசம் கொடுத்தா மட்டும் போதும். உடனே கட்டுன்னா நான் என்ன செய்வேன்... கொஞ்சம் மேலே எழுதுங்க... டயம் தருவாங்க...'

'நோ... இவ்வளவு பேசற உங்கிட்டே எப்படி பணம் வசூல் பண்றதின்னு எனக்குத் தெரியும்... நீ போலாம்...'

அந்த வங்கியிலேயிருந்து அவமானமும், வேதனையுமாக வெளியே வந்த வீரமுத்து, பக்கத்திலிருந்த டீஸ்டாலில் புகுந்தார்.

'நாயர், ஸ்ட்ராங்கா ஒரு டீ போடு' என்றவாறே அங்கு கிடந்த செய்தித்தாளை எடுத்து பிரித்து-படிக்கப் படிக்க வயிறு பற்றி யெரிந்தது... அந்த செய்தியில்...

இன்னின்னார், இவ்வளவு இவ்வளவு என்று பட்டியல் போட்டு பல பெரிய மனிதர்களின் வருமான வரி பல லட்சக் கணக்கில் பாக்கிக் கிடப்பதாக அறிவித்திருந்தார் மந்திரி!

—பிரேமா

**'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்**

"சுட்டி" யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக்கொடுத்து அறிமுகப் படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010




விதவைகளின் சரணாலயமாக காசி விளங்கி வருகிறது. பிறவி அழுக்கை களைவதாக நினைத்து, கங்கைக் கரையின் அசிங்கத்தில் நாடு முழுவதிலுமிருந்து வரும் சுமார் 8000 விதவைகள், நிராதரவான நிலையில் சாவை எதிர்நோக்கி வாழ்கிறார்கள்.

இந்தப் பரிதாபத்துக்குரியவர்களை பற்றி சமீபத்தில இந்தியா டுடே ஏடு ஆய்ந்து வெளிச்சம் போட்டுக் காட்டிய தகவல்கள், நமது அனுதாபத்திற்கும், தீவ்'ர சிந்தனைக்கும் உரியவை.

இரக்கமற்ற பிள்ளைகளால் நிராகரிக்கப் பட்டவர்கள்; சொதத்தை பறி கொடுத்து விரட்டப்பட்டவர்கள்' பக்தர்களின் தர்மத்தை மட்டுமே நம்பி உயிரும் உடலும் பிரியாமலிருக்கவே உண்ண முடிந்தவர்கள்—இவர்கள் எல்லோருக்கும் நிராதரவாய் தனித்திருக்கிறோமே என்ற உணர்வே எதனையும் விடக் கொடுமையானதாக இருக்கிறது. ஆற்றங்கரையோர சிலிர்க்கும் குளிர் வயோதிகபலவீனத்தில், எலும்புகளில் பாய்கிறது. பிளாஸ்டிக் காகிதமும், செய்தித் தாளுமே இவர்களுக்குப் போர்வையாகின்றன.

காலைப் பனி நேர கங்கை நீரில் மூழ்கி, பூஜை செய்து, தீ மூட்டி அரிசியைப் பொங்க வைத்து ஒரே ஒரு வேளை மட்டுமே உண்கிறார்கள். தலையை மொட்டையடித்து, வெள்ளை உடுத்தி, எல்லோருடனும் கலந்து பழகமுடியா சாதிக் கட்டுப் பாடிடையே வாழும் ஓர் அவல வாழ்க்கை இவர்களது.

சந்திப்பிற்கு உட்படுத்தப்பட்ட 440 விதவைகளில், பாதி பேர் பிச்சை எடுத்தே வாழ்வதாகத் தெரிகிறது. மாதிரிக்கு இதில் 70 பேரை மட்டும் தேர்ந்து மேலும் ஆய்ந்ததில் சில புதிய தகவல்கள் புரிந்தன. 70 இல் ஒருவரே மெட்ரிக் வரை படித்தவர். 99% விதவைகள் படிப்பு வாசனையற்றவர்கள். இவர்களின் கடந்த கால கசப்பான வாழ்க்கை சில புரட்சி கரமான




எண்ணங்களை அவர்களிடம் தோற்றுவித்திருக்கிறது. 68 பேர் பெண்கள் படிக்க வேண்டும் என்கிறார்கள். 37 பேர் ஆண், பெண் கூட்டுக் கல்வி முறைக்குச் சம்மதிக்கிறார்கள். 51 பேர் பால்ய விவாகத்தை எதிர்க்கிறார்கள். 46 பேர் விதவைகள் மறுமணத்தை ஒப்புக் கொள்கின்றனர். அதே நேரத்தில் 51 பேர் நிச்சயம் மோட்சத்தை அடைவோம் என்ற நம்பிக்கையோடிருக்கின்றனர். 61 பேர் இந்த சோக வாழ்க்கைக்குக் காரணம் முற்பிறவியின் பாவ வாழ்க்கையே என்று நினைக்கிறார்கள்,

இவர்களில் பசிக் கொடுமைக்குத்தாக்குப் பிடிக்க முடியாது விபசாரத்தில் ஈடுபட்டோரும், சதை வணிகர்களின் கோரப் பிடியில் சிக்கியவர்களும் உண்டு. முன்பு இங்குள்ள சில தனியார் விதவை இல்லங்கள், இவர்களுக்கு மறுமணம் செய்விப்பதாகச் சொல்லி, விபச்சார விடுதிக் காரர்களுக்கு விலைபேசி விற்று வந்ததை, இப்போது சமூக நலத்துறை ஓரளவு தடுத்து உள்ளது.

உத்திரப்பிரதேச அரசு என்ன தான் செய்து கொண்டிருக்கிறது? அது வழங்கும் ரூ 60 முதியோர் உதவித் தொகை மிகச் சிலருக்கே பயன்பட்டு வருகிறது. 72 வயது பார்வதி சொல்கிறார். "நான் எப்படி உதவித் தொகை வாங்குவது?

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

இதற்கான விண்ணப்பத் தாளுக்கே ரூ 125 கேட்கிறார்களே. எனக்கோ இன்றைய சாப்பாட்டிற்கே பணமில்லை. இந்த உதவித் தொகையெல்லாம் பணக்கார விதவைகளுக்குத்தான்!"

இவர் சொன்னது சரிதானா என்று பார்க்க 440 விதவை களைக் கேட்டதில் அதில் 56 பேரே உதவித் தொகை வாங்கு வதாகத் தெரிந்தது. இதிலும் 40 பேர்கள் இத்தொகை பெற தகுதியற்றவர்கள் என்பதும் புரிந்தது!

நாட்டின் மிக உயர்ந்த பிரதமர் பதவியில் ஒரு விதவை அமர்ந்திருக்கும் இந்த தேசத்தில், ஆயிரக்கணக்கான பரிதாபத்-திற்குரிய விதவைகளுக்கு எந்த சமூகப் பாதுகாப்பும் இல்லை. குறைந்த பட்ச வாழ்க்கை தேவைகள் கூட இல்லை. வேறு யார் இவர்களைப் பற்றி கவலைப்பட இருக்கிறார்கள்?

காசி சொர்கத்துக்கு வாசலாக இருக்கலாம். ஆனால் உற்றாராலும் அரசாலும் கைவிடப்பட்ட ஏழை விதவைகளுக்கு, இது நிச்சயமாக ஒரு பூலோக நரகமே!

—எழில்

**கூட்டு முன் இதழ்களைப் படிக்கவில்லையா?**

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும் - அறிவூட்டும் சரியாக பிரச்சனைகளைப் பார்க்க துணைபுரியும். முன் இதழ்களை சேமியுங்கள். படிக்காதவர்களுக்கு வழங்கி பயன் படுத்துங்கள். தற்போது இதழ் எண் : 8 முதல் 24 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை [M.O.] அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

ரங்கா டைப் பௌண்ட்ரி

- போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
- எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்.

அலுவலகம் : 73 ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112

தொழிலகம் : 38, குட்டிசெட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7

தொலைபேசி : 37999, 664293

# தினம் 150 கி.மீ. ஓடியவர்

இந்த மனிதரை நீங்கள் கேள்விப் பட்டிருக்க மாட்டீர்கள். ஆனால் சென்ற நூற்றாண்டு ஐரோப்பா இந்த நார்வே நாட்டு குள்ளரை கண்டு வியந்திருக்கிறது. மென்சன் ஏர்னஸ்ட் என்ற இந்த சலிக்காத ஓட்டக்காரரின் நீண்ட தூர ஓட்டங்களை கடந்த 140 ஆண்டுகளில் எந்த ஒலிம்பிக் வீரரும் முறியடிக்க-வில்லை.

லண்டனுக்கும் போர்ட்ஸ் மவுத்துக்கும் உள்ள 116 கி.மீ. தூரத்தை ஒரேயடியாக 9 மணியில் இவர் ஓடி முடித்த போது இவர் புகழ் பரவத்தொடங்கியது.

வெறும் 150 பவுண்டுக்காக இவர் கான்ஸ்டான்டி நோபிளி லிருந்து சில முக்கிய கடிதங்களை, கல்கத்தாவிற்கு ஓடிப் போய் சேர்த்து விட்டு 2 மாதத்திற்குள் திரும்புவதாக சில ஆங்கில வணிகர்களிடம் ஒப்புக் கொண்டார். மொத்த தூரம் 8300 கி.மீ. 23, ஜூலை 1836 காலை 5 மணிக்கு கிளம்பி 30 நாட்கள் 4 மணியில் கல்கத்தாவை அடைந்தார். நான்கே நாள் ஓய்விற்குப் பின், மீண்டும் ஓடி கான்ஸ்டான்டி நோபிளுக்கு 28, செப்டம்பர் அன்று வாக்குறுதிப் படி திரும்பி வந்து சேர்ந்தார்.

ஏர்னஸ்டுக்கு ஓடுவது என்பது இயற்கை உந்துதல். ஒரு நாளைக்கு 150 கி.மீ க்கு மேல் இவர் பல முறை ஓடியதுண்டு. இன்றைய உலகப் புகழ் பெற்ற பெரும் தூர ஓட்டக்காரர்களே 42 கி.மீ தான் ஓடுகிறார்கள்.

40 வயதில் 1843 இல், நைல் நதியின் தோற்று வாயை எப்படியாவது ஓடிக்காண வேண்டுமென்பதற்காக அலெக்சாந்தி ரியாவிலிருந்து கேப் முனை வரை ஆப்பிரிக்கக் கண்டத்தின் முழு நீளத்தையும் ஓடிப் பார்க்கத் திட்டமிட்டார். நைலில் சேரும் ஒரேயொரு நீர் விழ்ச்சியையே அவரால் பார்க்க முடிந்தது. அதற்குள் வயிற்றுப் போக்கும், நோயும் இவரது ஓட்டத்தை நிரந்தரமாக நிறுத்தி விட்டன. "மானின் விரைவையும், குருவி யின் சுறுசுறுப்பையும் தனதாக்கிய இது போன்றவரை உலக அரங்கம் கண்டதில்லை." என்று பொறிக்கப்பட்ட இவர் கல்லறை, இன்று எகிப்தின் அஸ்வான் அணைக்கட்டின் நீருக்குள் கிடக்கிறது.

—இ. ஜே. சுந்தர்

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

# எமக்கு வந்தவை

***முற்றுப் பெறாத கவிதை*** : (கவிதைத் தொகுப்பு) ஆசிரியர்: வேனில், கிடைக்குமிடம்: அறிவாலயா பதிப்பகம், 5/40-A, பங்கஜா மில் ரோடு, கோவை-641 018. விலை ரூ. 3.50

***சூரிய மழை*** : (கவிதை தொகுப்பு) ஆசிரியர்: அனிதா; கிடைக்குமிடம்: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி. நகர், சென்னை-600 017. விலை ரூ. 6.00

***அத்தைக்கு மீசை முளைக்கிறது*** : (நகைச்சுவைத் துணுக்குகள்) ஆசிரியர்: வ. தேனப்பன், கிடைக்குமிடம்: தேன் வள்ளியம்மை பதிப்பகம், 30, வாடியார் வீதி, தேவக்கோட்டை-623 302. விலை ரூ. 3.00

***இது முதல் அத்தியாயம்*** : (நாவல்) ஆசிரியர்: கார்த்திகா, ராஜ்குமார், கிடைக்குமிடம்: பூக்கடை பதிப்பகம், அஞ்சல் பெட்டி எண். 501, பார்க் டவுன், சென்னை-600 003. விலை ரூ. 10.00

***மாற்றம்*** : (தட்டச்சு மாத இதழ்) முகவரி: ஆசிரியர்: 'மாற்றம்', சமூக முன்னேற்ற திட்டம், 56-C, மாதவரம் நெடுஞ்சாலை, தபால் பெட்டி, சென்னை-60.

***முன்னோடி*** : (மாணவர்-இளைஞர் மாத இதழ்) ஆசிரியர்: ப. இளங்கோ, 37, ஜெயந்தி விடுதி, மில்லர் சாலை, சென்னை-600010. தனியிதழ்: 50 காசு ஆண்டு சந்தா ரூ. 6.00

***புதிய உதயம்*** : (மாணவர் மாத இதழ்) தனிச்சுற்றுக்கு மட்டும் ஆசிரியர்: ப. கலைநேசப்பிரபு, 43, 5வது பிளாக், பொறியியற் கல்லூரி விடுதி, கிண்டி, சென்னை-600 025. விலை ரூ. 1.00 ஆண்டு சந்தா ரூ. 12.00 அரையாண்டு சந்தா ரூ. 6.00

***துடிப்பு*** : (சைக்ளோஸ்டைல்டு மாத இதழ்) ஆசிரியர் குழு: அறை எண்-5, 28, வடக்கு வீதி, வலங்கைமான்-612 804. நன்கொடை 60 காசு.

***சிதறல்*** : (கையெழுத்து மாத இதழ்) ஆசிரியர்: கோமகன், மன்னை நெடுஞ்சாலை, செல்லூர்-613 705. அ.கு. எண். 613 705.



**சமுதாய இருளே**

*மெழுகுவர்த்தி தான் நாங்கள்*
*அனைவரும் ஒன்றானால்*
*ஒளியின் சூரியனையும்*
*வென்றிடுவோம்*

—காஞ்சி. வை. மேகநாதன்

# வாசகர் குமுறல்

## பொது விடங்களில் புகைப் பிடிப்போர்;

ஆண்டு சிலவற்றிற்கு முன்னால் புகை பிடிப்போரின் எண்ணிக்கை குறைவு. இன்று புகை பிடிக்காதோரின் எண்ணிக்கை தான் சொற்பமாக உள்ளது. பிடிக்கும், தீக்குச்சிக்கும் பஸ் ஸ்டாப்புகளில் பிச்சை எடுக்கும் பெரிய மனிதர்களை நினைத்தாலே உள்ளம் கூசுகிறது. நெரிசல்களில், இடிபாடுகளில் ஒரு புறம் பஸ் லாரி விடும் புகை போதாதென்று, புகைஞர்கள் இழுத்துவிடும் புகை எத்தனை பேர்களின் நுரையீரலை நலம் விசாரிக்கிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. புகை பிடிக்காத பலர், புகை பிடித்த பலனை இவர்களால் அனுபவிக்க வேண்டுமா? செய்யாத குற்றத்திற்காக நிரபராதிக்குத் தண்டனையா? குடிப்பவனால் கூட இவ்வளவு தீங்கு பக்கத்தில் இருப்பவனுக்கு ஏற்படுவதில்லையே. "புகை பிடிப்பது தீங்கானது" என்று சின்ன எழுத்துக்களில் போடுவது மட்டும் போதாது. பொது இடங்களில் புகைப்பவர்களுக்கு நிஜமாக நிச்சயமாக தண்டனை வழங்கினால், இத் தீமையைத் தடுக்கலாம்.

—R. ரவி, அம்பூர்

## மண்ணெண்ணெய் குழாயில் பாமாயில்;

அரும்பாக்கம், ஜெகன்னாத நகர் ரேஷன் கடையில் (C.R.S.) மண்ணெண்ணெய் இறைப்பதெற்கென்று ஒரே ஒரு குழாய் மட்டுமே வைத்திருக்கின்றார்கள். "பாமாயில்" வரும் பொழுதெல்லாம் 'பாமாயில்' டின்னுள்ளும் இதே மண்ணெண்ணெய் இறைக்கும் குழாயைப் போட்டே பாமாயிலையும் இறைக்கிறார்கள். இதனால் பாமாயிலில் மண்ணெண்ணெய் வாடை வீசுகிறது. இதுபற்றி கடைக்காரர்களிடம் கேட்டதற்கு 'எங்களிடம் இருப்பது ஒரு 'பம்பு' தான். இதைவைத்துதான் நாங்கள் 'அட்ஜெஸ்ட்' செய்து கொள்ளவேண்டும்' என்கிறார்கள். அது சரி. நீங்கள் வேண்டுமானால் 'அட்ஜெஸ்ட்' செய்து கொள்ளலாம் எங்கள் வயிறு? இதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து இந்தக்கடைக்குக் கூடுதலாக 'ஒருபம்பு' வழங்கி இப்பகுதி மக்களின் குறையைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

சீ. ரகுராமன், சென்னை-106.

## பல்கலைக்கழகத்திலும் இந்தி வெறியா?

இந்தியப் பல்கலைக் கழகங்களில் இனி மாநில மொழிகளில் கல்வி பயிற்றுவிக்கப் படாதெனவும், மேற்படிப்பு பட்ட வகுப்புகளில் ஆங்கிலமோ, தேசிய மொழியாகக் கருதப்படும் இந்தியோ பயிற்றுவிக்கப்படும் வகையில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானியக் குழுத் தலைமையிலிருக்கும் திரு. மாதிரி ஷா அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக கருத்தரங்கு பல்கலைக் கழக இதழ்களில் தெளிவு படுத்தியுள்ளார்.

இத் திட்டம் விளைச்சலுக்கு வருமுன் வேரோடு வெட்டி எறிய மாநில மொழிகளின் சொந்தக்காரர்கள் உடனே எதிர்ப்புணர்வைக் காட்டியாக வேண்டும். ஏற்கனவே நம் மாணவர்கள் பாடங்களை ஆங்கிலத்தில் புரிந்து கொள்வதிலேயே அதிக நேரத்தை வீணடிக்கையில், புதிய இந்திச் சுமை வேறா? தேசிய ஒருமைப்பாடு பேசும் மத்திய அரசு இதனை நடைமுறைப்படுத்தினால் மாணவர்களின் முதுகெலும்புகளுக்கு பதில் கூற வேண்டியிருக்கும்.

—தமிழின்ப எழிலன், நாட்டறம்பள்ளி

## வேலை வாய்ப்பு பதிவட்டைகள் காணோம் :

திருச்சி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோரின் பதிவட்டைகளில் 1000 எண்ணிக்கை எப்படியோ தொலைந்து விட்டனவாம்·புதுப்பிக்க சென்றோறெல்லாம் திருப்பியனுப்பப்படுகின்றனர். ஏற்கனவே வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதில் நம்பிக்கை இழந்து வரும் நிலையில், அலுவலர்களின் பொறுப்பற்ற செயல் கொஞ்சநஞ்சம் உள்ள நம்பிக்கையையும் தகர்த்தெறிந்துள்ளது. உள்ளே நுழைந்தால் இவ்வலுவலகத்தில் செல்லரித்துப்போன, எலி கடித்த ரிஜிஸ்டர்களும், கோப்புகளும் நம் கண்ணில் படுகின்றன? உயர் அதிகாரிகள் கண்ணில் எப்போது படும்?

—சந்துரு, திருச்சி-20.

## அமைச்சரின் வேலை

சாதாரணமாக உள்ள ஒரு சிறு வியாபார நிறுவனத்தையே வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்றால் அதன் உரிமையாளர் எவ்வளவோ ஆழ்ந்த கவனத்துடன், ஆலோசனை செய்து திட்டமிட்டுத் திறம்படச் செயலாற்ற வேண்டியுள்ளது. இதற்கு அவருக்கு ஒரு நாளின் 18 மணி நேர உழைக்கும் நேரமே போதுமானதாக இல்லை. வேறு எந்தவிதமான பொழுது போக்கு கேளிக்கைகளிலும் அவர் மிகச் சில மணித்துளிகளைக் கூட செலவிட இயலாதவராக இருக்கிறார்.

அப்படியிருக்க பல்லாயிரக் கணக்கான பிரச்சனைகள் ஒன்றைக் காட்டிலும் ஒன்று பெரிதாக இருக்கின்ற இந்த நாட்டு நிர்வாகப் பொறுப்பில் உள்ள மந்திரிகள் எவ்வளவு ஆழ்ந்த கவனத்துடனும், ஆலோசனையுடனும் செயல்பட வேண்டியுள்ளது. நியாயமாக ஒரு நாளைக்கு 64 மணி நேரம் இருந்தால் கூட போதாது என்று இருக்கின்ற போது இங்கு நடப்பதென்ன?




செருப்புக்கடை, வெற்றிலை பாக்குக்கடைத் திறப்பிலிருந்து நர்சரி பிள்ளைகளின் ஓட்டப் பந்தய விழா வரை ஆனது, ஆகாததற்கெல்லாம் மந்திரிகள் போய் நின்று கொண்டிருக்கிறார்கள். மந்திரிகளின் நடவடிக்கைகளை, ஒவ்வொரு நாளின் 'புரோக்ராமைக் கவனித்தால் மிகப் பெரும் பகுதியாக அவர்களின் நேரம் செலவிடப் படுவது இது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகத் தான்.

ஏற்கனவே மந்திரிகள் தங்கள் கட்சியின் பொதுக் கூட்டங்கள், கட்சி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கட்டாயமாக கலந்து கொள்வதில் பெருமளவான நேரம் விரயம், அதன் கூட மேற்கண்ட விழாக்களும் சேர்ந்து விட்டால் அவர்கள் தங்களின் "மந்திரி பதவி"க்கான உண்மையான இலாகா பணியைப் பற்றி சிந்திப்பதற்கு நேரம் ஏது?

ஒளவுக்கு உருப்படியாக அரசாங்கம் செயல்பட வேண்டு ◄◄

மென்றால் மந்திரிகள் விழாக்களிலும் எந்த விதமான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வது என்ற சம்பிரதாயத்தை 100% அடியோடு ஒழித்து விட வேண்டும்.

இம்மந்திரிகள் கலந்து கொள்வதால் தேவையில்லாமல் செயற்கையாக மிக ஆடம்பரமாக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஆகும் அபரிமிதமான தண்டச் செலவும் மிச்சமாகும்.

--சூயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010



நாம் அறிய வேண்டியவர்கள்

# போஸ்ட் மாஸ்டர் பீட்டர்

இந்தியாவிலேயே, ஏன் உலகிலேயே நீடிய சமுதாயப் பணி செய்வதாகக் கருதப்படுபவர் இன்னும் 3 ஆண்டுகளில் 100 வயதாகப் போகும் சகோ. பீட்டர்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் 34 ஆண்டுகள், சுதந்திரம் பெற்ற பின் 34 ஆண்டுகள் அஞ்சல் துறையில், கிராமச் சூழ்நிலையில், ஒரு சிறந்த பொதுத்துறை பணியாளருக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் இவர்.

1913 இல் கொடைக்கானலுக்கு அடிவாரத்தில் உள்ள செண்பகனூரில் தனது 27 வயது முதல் 95 வயது வரை (1913-1981) போஸ்ட் மாஸ்டராகப் பணி புரிந்திருக்கிறார்.

நெல்லை மாவட்டத்து சேந்தமரம் கிராமத்தில் 1886-ல் பிறந்தவர். இவர் 3 வகுப்புகள் தான் பள்ளி சென்று பயின்றார். பின்பு வீட்டிலேயே ஆசிரியர் ஒருவர் மூலம் தமிழ், ஆங்கிலம், கணிதம் படித்து கொண்டார்.

தமது 23 வது வயதில் தன் குடும்பத்தையும், சொத்தையும் துறந்து விட்டு இவர் யேசு சபையில் துறவியானார். ஒரு கல்வி நிறுவனம், மடம் இவற்றை விட அதிக பணி தேவைபடும் இடம் அசமந்தமும், ஒழுங்கின்மையும் நிறைந்த அரசு நிறுவனங்களே. எனவே தனது பணியை வித்தியாசமாக அஞ்சல் துறைக்கு செய்ய முன் வந்தார் இவர்.

அஞ்சல் துறை ஒழுங்கு முறைப்படி 65 வயதில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும். ஆனால் தன் உடலில் தெம்பு இருக்கும் வரை பணி செய்ய விரும்புவதாக டெல்லி அஞ்சல் நிலையத்துக்கு விண்ணப்பித்தார். இவரது கடந்த கால ஒப்பற்ற தன்னல பணியைக் கருதி இவருக்கு அனுமதி வழங்கப் பட்டது. எனவே கூடுதலாக இன்னும் 30 ஆண்டுகள் இவர் பணியில் தொடர்ந்தார்.

பாமர கிராம மக்கள் புரியாத அஞ்சல் விவரங்களை கேட்கும் போதெல்லாம் பரிவுடனும் பொறுமையுடனும் சகோதரர் பதில் கூறுவார்.

அரசு அலுவலகங்களில் எப்போதாவது "மரியாதை வாரம்" கொண்டாடப்படும். பீட்டரின் 68 ஆண்டுகளில் அத்தனை வாரங்களும் மரியாதை வாரங்கள் தான். எந்த நிலையில் உள்ள மக்களுக்கும் மரியாதை, மதிப்பு, பரிவு காட்டுவதில் இவர் சளைத்ததில்லை.

"ஆபீஸ் நேரம் முடிந்து போய் விட்டது நாளைக்கு வாருங்கள்" என்று எவரையும் அவர் அனுப்பியதில்லை. 23-2-1982 இல் "பேட்டிரியாட்" பத்திரிகை இவரை "ஒரு கனவு அஞ்சலகப் பணியாளர்" என்று பாராட்டியுள்ளது.

இவர் தயாரித்துள்ள கோப்புகள், விளக்கக்குறி வரைவுகள் செருகேடுகள் யாவரையும் வியப்புக்குள்ளாக்கும். தூய்மை நிறைந்த இடத்தில் திறமையுடன் பணியாற்றியதற்காக 1949-லேயே அஞ்சல் துறை இவருக்குத் தங்க கடிகாரம் ஒன்றைப் பரிசளித்தது. இவரது அஞ்சல் அலுவலகம் இந்தியாவிலேயே சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

இவரது பணி நுட்பங்களை நேரில் கண்டு வாழ்த்த பல தலைவர்கள் நேரில் வந்ததுண்டு. வெளிநாடுகளின் பார்வையாளர்களையும் கவர்ந்ததுண்டு.

அஞ்சல் துறையின் விருது வாக்கியம் தனக்கல்ல, பணிக்கே முதலிடம் (Service before self) என்பது நடைமுறையில் போர்டில் மட்டுமே காணப்படுவதாகும். ஆனால் அதன்படி நீண்ட 68 ஆண்டுகள் நடந்து காட்டியவர் சகோ. பீட்டர்.

அரசாங்கப் பணியாளர் மனம் மாறினால் மட்டும் போதாது. சமூக அமைப்புகளை மேலேயிருந்து கட்டுபடுத்தி ஆட்டிப் படைக்கும் ஆளும் வர்க்கத்திடமிருந்து அதிகாரம் கை மாறும் போது தான் உண்மையான சுபிட்சம் ஏற்படும் என்பது உண்மைதான்.

எனினும் நேர்மையும், உழைப்பும், சேவை மனப்பான்மையும் மிக்க அரசு பணியாளர்களின் பங்கும் இதில் மறுக்க முடியாதது. அதற்கோர் அரிய எடுத்துக் காட்டு சகோ. பீட்டர்.

துறவிகள் மடாதிபதிகள் என்ற பெயரில் பெரிய கல்வி நிறுவனங்களின் நிழலில் சுக வாழ்வு வாழ்ந்து கொண்டு சமூகத்தைப்பற்றி அரைக்கணம் கூட நினைத்துப் பார்க்காத மாறு வேட மனிதர்கள் மத்தியில் இவர் நிச்சயம் வித்தியாசமானவர் தான்.

—குமுறும் நெஞ்சம்

தற்போது சகோ. பீட்டரின் முகவரி:
புனித [illegible] மருத்துவமனை, திண்டுக்கல்.624007.

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010




அ. ஆ. இ. ஈ........ என்ன இது என்று யோசிக்கிறீர்களா? நம் சென்னை தொலைக்காட்சி நிலையத்தார் வாரந்தோறும் "வாழ்க்கை கல்வி" என்ற நிகழ்ச்சியின் மூலம் தமிழ் அரிச் சுவடி வகுப்பு நடத்துகிறார்கள். டி.வி.யின் இந்த மகத்தான சேவை யாருக்காக? சென்னையில் உள்ளவர்களுக்காகவா? படித்து பட்டம் பெற்றவர்களுக்காகவா? அல்லது நான்கு மாடிக் கட்டிடத்தில் ஏ.ஸி, அறையில் வசித்து வரும் பணக்கார வர்கத்திற்காகவா? புரியவில்லை. உண்மையில் கிராமப்புற "குடிசை வாழ்" மக்களுக்கல்லவா "அடிப்படைக் கல்வி" போதிக்க வேண்டும். டி. விப் பெட்டியைக் கண்ணால் பார்க்கவே இவர்களுக்கு இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆகுமோ! நகரத்தில் மட்டுமென்ன நடுத்தர வர்க்கத்து குடும்பங்களைக் கூட டி.வி. இன்னும் முழுமையாக ஆக்கிரமித்த பாடில்லை. இந்நிலையில் இந்த நிகழ்ச்சியின் மூலம் டி. வி நிலையம் செய்யும் பணவிரயமும், காலவிரயமும் வேதனைக்குரியது.

வாழ்க்கைக் கல்வி தான் இந்த இலட்சணம் என்றால் பொழுது போக்கு அம்சங்கள் கொடுமையிலும் கொடுமை. "ஒளியும் ஒலியும்" ஒன்றை மாதிரிக்குப் பார்ப்போம். பொறுக்கியெடுத்த கழிசடை பாடல்களையும், இரட்டை அர்த்தம் தொனிக்கும் சாக்கடைகளையும் நாச்ச கூச்சமின்றி டி.வி. வீட்டுக்குள் ஒளி பரப்புகிறது. "கப்பக்கிழங்கு", "கட்ட வண்டியும்" டி.வி. நிலைய நேயர் விருப்பங்களோ!

திரைமலர் நிகழ்ச்சியில் சிலுக்கு சுமிதாவை ரொம்ப அவசியமாக பேட்டி கண்டு காட்டுகிறார்கள்! மக்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுப் பூர்வமான பேட்டி பாருங்கள்!

சினிமாப்படம் எடுப்பவனுக்குத் தான் பொது மக்களைப் பற்றி அக்கறையில்லை, பணம் போட்டு படமெடுப்பவன், தன் பையை நிரப்ப எந்த அசிங்கமும் செய்வான். ஆனால் மக்கள் நல அரசாக வருணிக்கப்படும் இந்த அரசுக்குக் குறைந்த பட்ச சமூகப் பொறுப்பு வேண்டாமா? —சீ. இரகுராமன், உடன்

# மனவெளி வீரர்கள்

பெரிய முட்டைக் கோசைப் போல் உள்ள மனித மூளை இரு பெரும் பிரிவுகளாக உள்ளது. வலப் பகுதி, இடப் பகுதி யென்று. இடப்பகுதியின் தொழில் பகுத்தாய்தல். எனவே அதற்குப் புரிவது கணிதம், தர்க்கம் முதலியவை. வலப்பகுதியோ உள்ளுணர்வின் உறைவிடம். அதற்குப் புரிவது ஓவியம், நடனம், கவிதையனுபவம் போன்றவை. அறிதலில் இரு வகைகளுண்டு. ஒன்று, பகுத்தாய்தல். மற்றொன்று உள்ளுணர்வால் அறிதல். மேற்கத்திய கலாசாரம், பொதுவாக மூளையின் இடப்பக்கத் தொழிற்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து, வலப்பக்கத்தை உதாசீனம் செய்தது. பகுத்தறிவைத் தான் உண்மையான அறிவு என்றது. ஆனால் தற்கால மூளை ஆய்வு வலப்பக்க மூளையின் உள்ளுணர்வும் முக்கியமே என்கிறது.

ஆழ்நிலைத் தியானம் போன்ற தியான முறைகள் இடப்பக்க மூளைக்குச் சிறிது ஓய்வு கொடுத்து, வலப்பக்கத்தை இயக்குகின்றன. இதனால் மனிதன் தன் மற்றொரு அம்சத்தையும் உணருகிறான். மேலும், பல உள் உடலியல் நோய்கள் குறைகின்றன. மனிதனுடைய கிரியா சக்தி பெருகுகிறது. பல மகத்தான விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் வெறும் பகுத்தறிவின் மூலம் மட்டும் கண்டுப்பிடிக்க படவில்லை. மேதை ஐன்ஸ்டைன் கூட தன் ஆய்வுகளில் உள்ளுணர்விற்கு செவி சாய்த்துள்ளார். யோக, தியான முறைகளிலீடுபடுபவர் சோம்பேறிகளல்லர். அவர்கள் மனவெளி வீரர்கள். இது நவீன விஞ்ஞானத்தின் முடிவு. மனவெளி விஞ்ஞானத்தின் ஆரம்ப கட்டங்கள் இவை.

எதையும் நம்ப மறுப்பதல்ல விஞ்ஞானம். நிருபித்துக் காட்டக் கூடிய வகையில் நம்பிக்கையை வெளிப்படுத்துவதே விஞ்ஞானமாகும்.

அழகாக ஓவியம் வரைகிறது ஒரு சிறு குழந்தை. மழலைக் கவிதை பாடுகிறது மற்றொன்று. இதைக் கண்டு "சரி இதெல்லாம் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் கணக்கில் புளியாக இருக்கின்றாயே" என்கிறார் தந்தை. இது தான் தற்கால கல்வி முறையின் தாக்கம். மனிதனைக் கூறு படுத்தும் இக் கல்வி முறையை மாற்ற வேண்டும். மேலை நாடுகள் இதை உணர ஆரம்பித்து விட்டன.

— ரமேஷ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

தொழுநோய் வராதிருக்க விரைவில் தடுப்பு ஊசி வரக் கூடும். அதற்கான ஆய்வுகள் வெற்றிபெறும் நிலையில் உள்ளன. (சென்னை மருத்துவர் டாக்டர் வீரராகவன் அவர்களின் சாதனை இது.)

அதற்குமுன் இந்நோய் முற்றிலும் வராமல் தடுப்பது முழு சாத்தியமில்லை. ஆனால் ஆரம்ப அறிகுறிகள் தோன்றியவுடன் நடவடிக்கை எடுத்தால் முழுமையாக குணப்படுத்தி விடலாம்.

__அறிகுறிகள்:__ உடலில் தோன்றும் சிவந்த பளபளப்பான உணர்ச்சியற்ற படையே நோயின் ஆரம்ப அடையாளம். அங்கு கிள்ளினால் வலிக்காது. மயிர்க்கால்கள் இருக்காது: வியர்வை தோன்றாது. படையின் அருகிலுள்ள நரம்புகள் தடித்து காணப்படும்.

ஒரு சிலர்க்கு படைகள் தோன்றாமலே கையோ, காலோ உணர்ச்சியற்றுப் போகும். அவர்கள் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

## தொழு நோய் வராதிருக்க..

இந்நோயை முற்றிலும் குணப்படுத்த விலை குறைந்த டாப்சோன் (Dapsone) என்னும் மாத்திரையைத் தொடர்ந்து நீண்ட காலம் உட்கொண்டு வருவதே போதுமானது. ஆனால் தகுந்த மருத்துவ மேற் பார்வையின்றி இதனை உட்கொள்ளுதல் ஆபத்தாகும்.

__சில உண்மைகள்:__ இந்தியாவில் 35 லட்சம் பேருக்குத் தொழுநோய் உள்ளது. ஜனவரி 30ஆம் தேதி இந்தியாவில் தொழு நோய் தடுப்பு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொழுநோய் "மைக்கோ பாக்டீரியம் லெப்ரே" என்ற நோய்க்கிருமியினால் பரவுகிறது. இது தொற்றும் வகை, தொற்றாத வகை என இருவகைப்படும். காது தடித்து புருவம் இழந்து, மூக்கு சப்பையான தோற்றம் அளிப்பது தொற்றும் வகை. மற்றது தொற்றாதது.

இந்நோய் பரம்பரை வியாதியல்ல. தீய ஒழுக்கத்தால் வருவது அல்ல.

—G. வெங்கடேசன், தொழுநோய் ஆய்வாளர், திருவரங்கம்

[அடுத்து: பல்வலி வராதிருக்க.]

## முரசொலி தொழிலாளர்கள்

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் குடும்ப நிர்வாகத்தின் கீழ் இருக்கும் 'முரசொலி' ஆரம்பத்தில் சிறு பத்திரிகையாகத் தொடங்கப்பட்டது. இன்று மிகப் பெரும் பத்திரிகையாக மோனோ, ரோட்டரி போன்ற மிக நவீன ராட்ஷச அச்சு இயந்திரங்களுடன் விளங்கி வருகிறது. ஏற்கனவே மார்க்கெட்டில் இருக்கும் பிரபல மசாலா பத்திரிகைகளுடன் போட்டி போடும் குங்குமம், முத்தாரம் போன்ற மசாலா இதழ்களை கருணாநிதி நிர்வாகம் வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இந்த வளர்ச்சிக்கு அச்சுத் தொழிலாளர்களின் கடும் உழைப்பு ஒரு முக்கிய காரணமாகும்.

அங்கு பணியாற்றும் அச்சகத்தொழிலாளர்கள் வெளியிடும் அறிக்கை, அங்கு தொழிலாளர்களின் பரிதாப நிலையை எடுத்துக்காட்டுகிறது. அச்சுக்கோப்பில் 6 பேரும், மோனோவில் 5 பேரும், ரோட்டரியில் 6 பேரும் பைண்டிங்கில் 7 பேரும் வேலை செய்கின்றனர். இத்துறைகளை தனியாக பிரித்து தனி நிறுவனங்கள் போல காட்டி சட்டத்தை ஏமாற்ற முயல்கிறார்களாம், குங்குமம், முத்தாரம் ஆகிய பத்திரிகைகளைத் தனியாக ஒரு காண்ட்ராக்டரின் கீழ் 7 கம்போசிடர்களைக் கொடுத்து குறைந்த சம்பளமாக ரூ 240 விருந்து பத்தாண்டுக்கு மேல் பணி புரிபவர்க்கு ரூ 350 வரை தான் தருகிறார்களாம்.

இந்த ரூ 240 இல் பிடித்தங்கள் போக கைக்கு வருவது ரூ 215 தான், இவ்வளவு குறைந்த சம்பளத்தை வைத்துச் சமாளிக்க முடியாத தொழிலாளர்கள் சென்ற ஏப்ரலில் மேலாளர் பெரியண்ணனிடம் சம்பள உயர்வு கேட்டபோது "எம்.பி. (மாறனை) யைக் கேட்டு மேயில் சொல்கிறேன்" என்றார். மே மாதம் சம்பளம் வாங்கும்போது கேட்டதற்கு, "சம்பளம் உயர்த்திக்கொடுக்க சட்டம் இல்லை. அப்படி அதிகம் கொடுக்கும் இடத்தில் யார் யாருக்கு விருப்பமோ போய் விடுங்கள்" என்பதே வந்த கறார் பதில்.

தினமும் கூட்டத்தில் தமிழினத்திற்காகவும், தொழிலாளர்களுக்காகவும் வாய்கிழிய பேசுகிறார் கருணாநிதி. தனது தொழிலாளர்கள் நீங்கலாக மற்றவர்களுக்குத்தான் எட்டப் பார்வையுடன் குரல் கொடுப்பாரோ! இந்தத் தொழிலாளர்கள் நிலைக்கு அவர் பதில் என்ன?

– நிறைமதி

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

## நமது அன்னாசி மருத்துவம்

☐ அன்னாசிப்பழம் அதிக சூடு, சீதபேதி, வயிற்று வலி ஏற்படுத்தும் என்பது மூட நம்பிக்கை- மாம்பழம், ஆரஞ்சுபழம் இவற்றில் உள்ள அதே உஷ்ண அளவான 14 காலரியே அன்னாசியிலும் உள்ளது. தினசரி நாம் பயன்படுத்தும் புளியின் உஷ்ணம் 82 காலரி ஆகும்.

☐ அன்னாசிப்பழம் கண்டிக்கும் முக்கிய நோய்கள்:— ஒரு பக்கத்தலைவலி, இருபக்கத்தலைவலி, எல்லாவித கண் நோய்கள், எல்லாவித காது நோய்கள், எல்லாவித பல் நோய்கள், தொண்டை சம்பந்தமான நோய்கள், வாய்ப்புண், மூளைக்கோளாறு, ஞாபக சக்தி குறைவு போன்றவை. தேனும், அன்னாசிப்பழமும் சேர்த்து செய்யப்படும் அன்னாசிப்பழ சர்பத்தை 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிடுவது இந்நோய்களை விரைவில் போக்கடிக்கும்.

☐ மஞ்சட் காமாலையை விரைவில் குணப்படுத்தும் ஆற்றல் அன்னாசி சாறுக்கு உண்டு.

☐ 2½ ரூபாய் எடையுள்ள அன்னாசிப் பழத்தில் உள்ள உயிர் சத்துக்கள்:— வைட்டமின் ஏ—17 மி.கி, பி-2—0.34 மி. கி, சி—0.18 மி. கி, சுண்ணாம்புச்சத்து—6 மி. கி, இரும்புச்சத்து 0.3மி. கி

☐ இரத்தமிழந்து பலவீனமாக இருப்பவர்களுக்கு அன்னாசி சிறந்த டானிக்.

☐ பித்த சம்பந்தமான கோளாறுகள் காரணமாக காலை வாந்தி, கிறுகிறுப்பு, பசி மந்தம் போன்றவற்றை நீக்குவதில் அன்னாசி சூரன்.

☐ பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் குணமாக அன்னாசி உதவும்.

☐ இரத்தத்தைச் சுத்தி செய்வது, சீரண உறுப்புக்களை வலுப்படுத்துவது, மலக்குடலைச் சுத்தப் படுத்துவது அன்னாசியின் சிறப்பு.

☐ தொடர்ந்து 40 நாட்கள் இப்பழத்தை உண்பவர்கள் தேகத்தில் ஆரோக்கியமான பளபளப்பு ஏற்படும்.

☐ தீராத கோடை தாகத்தைத் தணிக்கும் ஆற்றல் அன்னாசிப் பழச் சாறுக்கு உண்டு.


—சித்தன்


**சுட்டி விற்பனையாளர்கள்** அதிகாரப்பூர்வமாக கீழ்க்கண்ட இடங்களில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இடங்கள் தவிர பிற இடங்களிலிருந்து விற்பனை செய்ய ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்:-

**சென்னை:** நகரம் முழுவதும்.
**செங்கல்பட்டு மாவட்டம்:** காஞ்சிபுரம், திருவள்ளூர், வண்டலூர், போரூர்.
**வட ஆற்காடு மாவட்டம்:** திருப்பத்தூர், ஆரணி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வளவனூர், போளூர், மேல்பட்டி.
**தென் ஆற்காடு மாவட்டம்:** விழுப்புரம், கடலூர், சிதம்பரம், திருக்கோவிலூர், வடலூர்.
**தஞ்சை மாவட்டம்:** கும்பகோணம், வேதாரண்யம், தகட்டூர், மன்னார்குடி, அய்யம்பேட்டை.
**திருச்சி மாவட்டம்:** திருச்சி, கரூர், அரும்பாவூர், வெள்ளியணை
**சேலம் மாவட்டம்:** சேலம், சீத்தாராம்பாளையம், நாமக்கல் ஜலகண்டாபுரம்.
**பெரியார் மாவட்டம்:** கொடுமுடி, குமாரபாளையம்.
**தர்மபுரி மாவட்டம்:** ஊத்தங்கரை.
**நீலகிரி மாவட்டம்:** ஊட்டி, கோத்தகிரி, கிலறாங்.
**கோவை மாவட்டம்:** கோயம்புத்தூர், பீளமேடு, பொள்ளாச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, வி.ஜி. புதூர், சூலூர், சேயூர், காரமடை, செகமம், மின்பாறை, வால்பாறை, குப்புசாமி நாயுடுபுரம், சின்னியம்பாளையம், நம்பியாம்பாளையம், மதுக்கரை, பெதப்பம்பட்டி
**மதுரை மாவட்டம்:** மதுரை, திண்டுக்கல், தேனி, தென்கரை
**புதுக்கோட்டை மாவட்டம்:** உலகன்பட்டி.
**இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம், சாத்தூர், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர்
**திருநெல்வேலி மாவட்டம்:** தூத்துக்குடி, கோவில்பட்டி, இராதாபுரம், ஏரல், குருக்குச்சாலை, புதியம்புத்தூர், எப்போதும் வென்றார், கரிவலம்வந்த நல்லூர், சங்கரன் கோவில்
**கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில், மார்த்தாண்டம்.
**வெளி மாநிலங்கள்:** பெங்களூர், பம்பாய்.

☐ சுட்டி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதி** வெளிவரும்.
☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
☐ தனிப்பிரதி 50 காசு
☐ எல்லாத் தொடர்புகளுக்கும்: ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010




நீங்கள் உணவில் கலப்படம் செய்வதில்லை. உங்களுக்குப் பொருட்கள் சப்ளை செய்பவர்கள்தான் கலப்படம் செய்கி-றார்கள். எனவே, நீங்களே இனி உணவுப் பொருட்களை அரவை செய்யவும், தயாரிக்கவும் சாதனங்கள் வாங்க அரசு உதவும்!

—ஓட்டல் முதலாளிகள் கூட்டத்தில் முதலமைச்சர் பேச்சு.

ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40.
அச்சிடுவோர்: J. S. கிட்டாஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 35 வரப்பை தெரு, சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM1888 / Dec 2010

கட்டு: மாத இதழ் 1, மார்ச் 1983 Regd. No. TN/MS(N)/31
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-6



1888 / Dec 2010
http://www.thamizham.net
FREE E BOOKS (TAMIL)
தமிழகம்

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcan production with innovative technology and the farmers have achieve a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonne to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distrib ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousan farmers (a bulk of Whom are small and marginal farmers) and generatin gainful rural employment to over fifty thousand families in the primary secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS [illegible] development pr grammes (I) Sakthi High School provides a conducive environment fo study and development of rural children. (II) Sakthi Institute of Techn logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasan Hospital provides medical care for the region.

http://www.thamizham.net
FREE E BOOKS (TAMIL)
தமிழகம்

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.